Date.01.08.2025.

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )**

**விழுப்புரம்.**

**OS.24/2021**

**வா.சா. 1**

**பெயர். திரு. சிவக்குமார்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு விழுப்புரத்தில் இந்தியன் வங்கி கணக்கு உள்ளது என்றால் சரிதான். அதில் நான் காசோலை பரிமாற்றம் செய்கிறேன் என்றால் சரிதான். இந்தியன் வங்கி மேலாளர் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். அவருடைய பேரேட்டில் நான் கொடுத்துள்ள காசோலை எண்கள். உள்ளது என்றால் மேலாளர் அவ்வாறு சொன்னாரா என்று எனக்குதெரியாது. நான் இங்கு இல்லை. என்னுடைய காசோலை அனைத்தும் எஸ்.எஸ்.கே கன்ஸ்ட்ரக்சன்ஸ் என்ற பெயரில் தான் வழங்கப்படும் என்றால் சரிதான். நான் தொழில் சம்மந்தமாக தான் அந்த கணக்கு மூலம் காசோலை வழங்குவேனே தவிர தனிப்பட்ட பரிமாற்றத்திற்கு அந்த வங்கி கணக்கு காசோலை வழங்கமாட்டேன். பிரதிவாதிக்கு நான் வழங்கிய காசோலைகள் அனைத்திலும் பார்த்திபன் என்ற பெயரில் எஸ்.எஸ்.கே கன்ஸ்ட்ரக்சன்ஸ் என்று இருக்கும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது தான் நான் பார்த்திபன் என்ற பெயரில் எஸ்.எஸ்.கே கன்ஸ்ட்ரக்சன்ஸ் நிருவன பெயரில் வழங்கிய காசோலை நகல் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் காசோலை எண். 031962 ஆகும். அந்த காசோலை தொலைந்துவிட்டது என்று நான் வங்கிக்கு தகவல் தெரிவித்தேன். அதற்கு ஆதரவாக நான் எந்தவித ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வங்கியில் சொன்னதோடு சரி. ஆனால் 031960, 031961, 031981 இந்த காசோலைகளும் மேற்சொன்ன காசோலையும் எனது காசோலை

புத்தகத்திற்குரியது என்றால் ஆமாம். இந்த காசோலைகளும் பார்த்திபன் என்ற பெயருக்கு எஸ்.எஸ்.கே கன்ஸ்ட்ரக்சன்ஸ் என்று வழங்கப்பட்டுள்ளது என்றால் நான் இந்த காசோலைகளில் 031962 கொடுக்கவில்லை. அதில் உள்ள கையெழுத்தும் என்னுடையது இல்லை. இந்த காசோலை எண்ணில் உள்ள கையெழுத்தும், இதர காசோலை எண்களில் உள்ள கையெழுத்தும் என்னுடையது தான் என்றால் சரியல்ல. வங்கி மேலாளர் சாட்சியம் சொல்லும் போது 031962 என்ற காசோலை எண். எந்த பேரேடுகளிலும் பதிவு செய்யவில்லை என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அதே போல் 031962 என்ற எண். உள்ள காசோலை என்னுடையது தான் என்று வங்கி மேலாளர் சொல்லியுள்ளார் என்றால் அவர் என்ன சொன்னார் என்று எனக்கு தெரியாது. எனது வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்த போது கூட அதை பற்றி கேட்கவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. காசோலை எண். 031962 என்ற காசோலையின் அசல் என் வசம் உள்ளது என்றும், அதை தாக்கல் செய்தால் எனக்கு பாதகமாகிவிடும் என்பதால் நான் அதை மறைக்கிறேன் என்றால் சரியல்ல. 031981 என்ற எண் கொண்ட காசோலை மற்றொரு காசோலையான 031962 என்று மாற்றிக் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.